# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

******

முறையீட்டு மனு எண்: **041/2019/மா**
ஆணை நாள்: 26–02–2020

**திரு. V. முருகேசன்,**
**தலைவர்,**
**ஸ்ரீ நகர் கூட்டுறவு காலனி குடியிருப்போர் நலச் சங்கம்,**
**தஞ்சாவூர்.** – முறையீட்டு மனுதாரர்

**ஆணையர்,**
**தஞ்சாவூர் மாநகராட்சி.** – எதிர் மனுதாரர்

தஞ்சாவூர், தெற்கு பூக்கொல்லை, 2வது குறுக்குத் தெரு, எண்.33 என்ற முகவரியில் செயல்படும் ஸ்ரீநகர் கூட்டுறவு காலனி குடியிருப்போர் நலச் சங்கம் சார்பாக அதன் தலைவர் திரு. V. முருகேசன் என்பவர் தாக்கல் செய்த 02.03.2019 நாளிட்ட முறையீட்டு மனு 06.03.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு முறையீட்டு மனு எண்.041/மா/2019 என எண்ணிடப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை:

முறையீட்டு மனுதாரர் 02.03.2019 நாளிட்ட தனது முறையீட்டு மனுவில் ஸ்ரீநகர் கூட்டுறவு காலனியில் அமைந்துள்ள பூங்காவின் வடக்கு பகுதியில் 20 அடிக்கு 120 அடி அளவுள்ள பூங்காவிற்குட்பட்ட இடம் தனியாருக்கு விட்டுக்கொடுக்கப்பட்டுள்ளது என்றும், பூங்கா அமைக்கும் பணி திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளபடி பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும், பூங்காவில் 15 அடி மற்றும் 10 அடி அகலம் கொண்ட இரண்டு கதவுகள் அமைக்கப்பட்டுள்ளதால் நான்கு சக்கர வாகனங்கள் உள்ளே சென்று வாகனம் நிறுத்துமிடமாக மாறும் வாய்ப்புள்ளது என்றும், இதனை அகலம் குறைந்த கதவுகளாக மாற்றி தர வேண்டுமென்றும், மேற்படி பூங்காவினை வரைபட

அனுமதியின்படி அமைத்து தங்களிடம் ஒப்படைப்பு செய்ய எதிர் மனுதாரருக்கு ஆணையிட வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

முறையீட்டு மனு மீதான அறிக்கையினை சமர்ப்பிக்க தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி மாநகராட்சி ஆணையர் தனது 19.11.2019 நாளிட்ட அறிக்கையில், நகர் சார் ஆய்வாளருடன் நகரமைப்பு பிரிவு அதிகாரிகள் இணைந்து மேற்படி மனைப் பிரிவு அளவீடு செய்யப்பட்டதில் மேற்படி மனை பிரிவில் உள்ள 72 மனைகளின் அளவுகள் சரியாக உள்ளது என்றும், மனைப் பிரிவில் அமைந்துள்ள சாலைகளின் அளவுகள் சரியாக உள்ளது என்றும், மீதமுள்ள பூங்கா இடத்தினை அளவீடு செய்ததில் அதன் மொத்த பரப்பளவு 26,958 ச.அடி உள்ளது என்றும், ஆனால் அனுமதி அளிக்கப்பட்ட மனைப் பிரிவில் பூங்காவின் பரப்பளவு 27,831 ச.அடி என்று உள்ளது என்றும் அதன் வேறுபாடு 873 ச.அடி ஆகும் என்று, அனுமதி அளிக்கப்பட்ட மனை பிரிவின் பூங்கா பரப்பளவிற்கும், நிலவியலில் உள்ள பரப்பளவிற்கும் உள்ள வித்தியாசம் தான் இவ்வேறுபாடு என்றும், தனி நபர்கள் யாருக்கும் நிலம் விட்டுக்கொடுக்கவில்லை என்றும் தெரிவித்தார். மேலும் பூங்கா அமைக்கும் பணிக்காக மதிப்பீடு தயாரிக்கும் போது, GST வரி விதிப்பு முறை நடைமுறையில் இல்லை என்றும், இதன் காரணமாக மேற்படி பணி தொடர்பான மதிப்பீட்டில் 12% குறைத்து பணியினை மதிப்பீட்டிற்குள்ளேயே செய்து முடிக்க வேண்டிய அவசியமானதால் சில இனங்களில் மதிப்பீட்டில் சிறிது குறைத்து செயற் பொறியாளரிடம் அனுமதி பெற்று பணிகள் முடிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி பூங்காவின் கிழக்கு, வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் தமிழ் நகர் மற்றும் ஸ்ரீராம் நகர் கூட்டுறவு காலனி என இரண்டு நகர்கள் அமைந்துள்ளன என்றும், இரு நகர்களுக்கும் இடையில் பாதை வசதி இல்லாததால் பொது மக்கள் பூங்காவை சுற்றி செல்கின்றனர் என்றும், பொது மக்கள் நடந்து செல்வதற்கும், பூங்காவின் உள்ளே நிகழ்ச்சிகள் நடந்தால் கூட்டத்தை கட்டுப்படுத்துவதற்காகவும் இரண்டு கதவுகள் அமைக்கப்பட்டுள்ளது என்றும் கதவுகளின் அருகில் நடைபாதை, நீரூற்று, மற்றும் பூச்செடிகள் அமைக்கப்பட்டுள்ளதால் நான்கு சக்கர வாகனங்கள் உள்ளே செல்ல வாய்ப்பில்லை என்றும், கட்டி முடிக்கப்பட்ட பூங்காவினை மாநகராட்சியின் கடிதம் ந.க.எண்.113/2019/எம்.சி.இ.4, நாள் 30.8.2019ன்படி குடியிருப்போர் நல சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தில் 21.11.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி தஞ்சாவூர் மாநகராட்சி உதவி செயற் பொறியாளர் அளித்த வாக்குமூலத்தில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பூங்கா கட்டி முடிக்கப்பட்டு, பூங்காவை 30.8.2019 அன்று குடியிருப்போர் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது என்றும் தெரிவித்தார்.

முறையீட்டு மனுதாரர் மற்றும் சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ள திரு. இராமச்சந்திரன் ஆகியோர்கள் 09.01.2020 அன்று இம்முறைமன்றத்தில் விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் தங்களது மனைப்பிரிவில் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை, உரிய அங்கீகாரம் ஏதும் இல்லாமல் வீடு கட்டியுள்ளவர்களுக்கு சாதகமாக சாலை அமைக்க பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும், அதற்கான உரிய தொகையினை வசூலித்து தங்களது குடியிருப்போர் நலச் சங்கத்திற்கு வழங்கவேண்டும் என்றும் தெரிவித்தார்கள்.

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கைகள், மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மாநகராட்சி உதவி செயற் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஏற்கப்பட்டது. தங்களது மனைப் பிரிவிற்கு சொந்தமான பொது உபயோகத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை பிற குடியிருப்போர் பயன்படுத்தும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ள இடத்திற்குரிய தொகையினை வசூலித்து தங்களது சங்கத்திற்கு வழங்க கோரியுள்ள முறையீடு குறித்து மாநகராட்சி சட்ட விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020-ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 26-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//--

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலர்

பெறுநர்

(1) திரு. வி. முருகேசன்,
தலைவர்,
எண்.33, ஸ்ரீநகர் கூட்டுறவு காலனி குடியிருப்போர் நலச் சங்கம்,
பதிவு எண்.13/2016,
2-வது குறுக்குத் தெரு,
தெற்கு பூக்கொல்லை,
தஞ்சாவூர் - 613 004.

(2) ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர் - 613 001.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ. கோ. / உதரி